**பேலியகொட நகர சபை - 2023**
**-----------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பேலியகொட நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள் மற்றும் வரி உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 181(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பேலியகொட நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களின் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் இலக்கம் 3.28 இன் மற்றும் அதன் பின் இணைப்பு 2 இல் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல்களில் EG 6.2 இற்கு இணங்க செயற்பாட்டு தொழிற்பாடுகளின் மூலமான காசுப் பாய்ச்சலை கணிக்கும் போது | அடுத்த நிதியாண்டு முதல் சரியா தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக தயாரிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் அகல்விரிவான வருமானத்திற்கு சீராக்கல் மேற்கொண்ட பெறுமானத் தேய்வுச் செலவு ரூபா 4,951,266 தொகை குறைவாகவும், மீண்டுவரும் அல்லாத செலவுகளுக்காக அரசாங்கத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் ரூபா 17,872,279 தொகை மிகையாகவும், முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 4,759,339 தொகை மிகையாகவும் காட்டப்பட்டிருந்ததுடன், நடைமுறை சொத்துக்களில் குறைவடைந்திருத்தல் ஆகிய ரூபா 59,245,728 தொகை சீராக்கல் மேற்கொண்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | நியமத்தின் இலக்கம் 3.29 இன் மற்றும் அதன் பின் இணைப்பு 2 இல் விரிவாக விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல்களில் EG 6.3 இற்கு இணங்க முதலீட்டு தொழிற்பாடுகளின் மூலம் கிடைத்திருந்த காசுப்பாய்ச்சலை கணிக்கும் போது ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்காக பணமாக மேற்கொள்ளப்பட்ட முதலீட்டுப் பெறுமதி ரூபா 20,314,419 தொகை மிகையாகவும், முதலீட்டுத் தொழிற்பாடுகளின் கீழ் கூட்டுத்தொகை ரூபா 21,993,414 தொகை குறைவாகவும் பணமாக கிடைத்திருந்த ரூபா 8,311,790 தொகைக்கான முதலீட்டு வருமானம் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை கிடைத்திருந்த மூலதன மானியம் ரூபா 8,447,074 தொகை மூலதன மானியக் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு பதிலாக வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2024 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் பூர்த்தி செய்தருக்காத வாகன செயற்களத்தின் செலவாகிய ரூபா 2,000,000 தொகை நடைமுறை வேலை என இனங்கண்டு | 2023 திருத்திய கணக்கின் மூலம் சரி செய்யப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன், திருத்திய கணக்கின் மூலமும் சரி செய்திருக்கவில்லை. | | |
| (இ) | கணக்காய்விற்கு வழங்கியிருந்த தகவல்களின் படி சபைக்கு சொந்தமான 120 பாதைகளின் பெறுமதியை திருத்தி கணக்கின் மூலம் சரியாக சொத்துக்கள் என கணக்கீடு செய்யப்படும் என அறிவித்திருந்த போதிலும் 2023 திசெம்பர் 21 திகதியில் உள்ளவாறு சொத்துக்கள் என 13 பாதைகளின் பெறுமதி மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டின் ரூபா 44,487,072 தொகைக்கான சம்பள மீளளிப்பு ரூபா 48,561,740 தொகை என ரூபா 4,079,668 தொகையினால் மொத்த வருமானம் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | வாய்மொழி மூலம் ஏற்றுக்கொள்கின்றேன் என. | - மேற்படி - |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணைகளின் கூட்டுத்தொகைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களின் 08 கணக்குகளின் மீதிகளிடையே ரூபா 10,057,591 தொகைக்கான இணங்கியிருக்காத வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | 2024 ஆண்டில் சரி செய்யப்படும் என. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. | | | |
| (அ) | கடன் பட்டோர் | 4,216,270 | ஏடுகள் மற்றும் அட்டவணைகள் | கடன்பட்டோர்களுக்கான அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென அறிவித்திருந்த போதிலும், சமர்ப்பிக்கப்படவில்லை என வாய் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டது என. | குறிப்பிட்ட அட்டவணைகள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சிறு காசு | 11,503 | காலப் பகுப்பாய்வு, | அடுத்த ஆண்டு முதல் | - மேற்படி - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | ஏடுகள் மற்றும் அட்டவணைகள் | சரியாக அட்டவணைகள் மற்றும் காலப் பகுப்பாய்வுகள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | | |
| (இ) | சம்பளமற்ற விடுமுறை | 14,000 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - | |
| (ஈ) | ஆதன கடன் வட்டி மீளளிப்பு | 233,703 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - | |
| (உ) | தளபாடங்கள், உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களுக் கான பெறுமானத் தேய்வு | 1,126,128 | அட்டவணை | - மேற்படி - | - மேற்படி - | |

**1.7 இணங்காமை**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் VII ஆவது அத்தியாயத்தின் பந்தி 38(2) | நிதிக் கட்டுப்பாட்டுக்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுகின்றது எனவும், அந்த முறைமையை தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதன்படி முறைமை வெற்றிகரமாக நடாத்திச் செல்லப்படுவதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிறைவேற்றப்பட வேண்டிய எழுத்துமூல மீளாய்வொன்றின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டிற்கான கணக்காய்வுத் திட்டத்தின் பிரதியொன்று சமர்ப்பிக்கப்படும் என. | குறிப்பிட்ட சட்டத்தின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | அரச நிதிப் பிரமாணம் 571 | கூட்டுப் பெறுமதி ரூபா 11,812,964 தொகைக்கான 2 வருடங்களை மிகைத்துள்ள வைப்புக்களை ஆதனவழிப்புச் | கூடிய விரைவில் ஆதவளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை | குறிப்பிட்ட பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்திருக்கவில்லை. | எடுக்கப்பட்டு வருகின்றது என. | |
| (இ) | 2022 ஜனவரி 27 திகதிய 2264/18 இலக்கம் கொண்ட வர்த்தமானி அறிவித்தல் | 07 நிறுவனங்கள் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் இன்றி செயற்படுத்தப்பட்டு வருகின்றன. | நிறுவனங்களுக்காக மே மாதம் அளவில் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 38,021,625 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 33,099,357 தொகையாகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| வீதவரி மற்றும் வரி | 51,010 | 48,332 | 46,105 | 21,750 | 51,000 | 50,880 | 52,647 | 29,084 |
| வாடகை | 5,685 | 2,197 | 4,415 | 2,265 | 4,875 | 2,125 | 5,060 | 2,176 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 3,700 | 2,010 | 4,051 | 63 | 3,400 | 1,636 | 3,459 | 65 |
| ஏனைய வருமானங்கள் | 24,746 | - | 39,466 | - | 30,424 | - | 74,221 | 235 |
| | 85,141 | 52,539 | 94,037 | 24,078 | 89,699 | 54,641 | 135,387 | 31,560 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் சாட்டப்பட்டுள்ள கருமங்களை மேற்கொள்ளல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **துணைச் சட்டங்கள்** | | |
| (I) | கடைகளை வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக துணைச் சட்டங்கள் தேவைப்படாது என செயலாளரினால் கணக்காய்விற்கு அறிவித்திருந்த போதிலும் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 157(6)(இ) இன் படி கடைகளை வாடகைக்கு கொடுப்பதற்காக துணைச் சட்டங்கள் ஆக்கியிருக்கவில்லை. | கடைகளை வாடகைக்கு கொடுப்பதற்காக துணைச் சட்டங்கள் தேவைப்படாது என. | கட்டளைச் சட்டத்தின் படி செயற்பட வேண்டும். |
| (II) | வருடாந்தம் சனசமூக நிலையத்தை ஒதுக்குவதற்காக குறிப்பிட்ட கட்டணம் அறவீடு செய்தல் தொடர்பாக துணைச் சட்டங்கள் தயாரிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரித்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் துணைச் சட்டம் தயாரிக்கப்படும் என. | துணைச் சட்டங்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ)** | **பொதுமக்கள் பிரதிநிதித்துவம்** | | |
| | 2023 ஆண்டின் போது கிடைத்திருந்த 03 முறைப்பாடுகளை தீர்த்திருக்கவில்லை. | கடைபிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக அறிவுரைகள் வழங்கப்பட்டது என. | விரைவாக தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு உரிமை காணப்படாத புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான காணியொன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 4 ஆவது மைல் தூணில் பொது கழிவறை முறைமைக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 10,204,180 இற்கான தொகை முறைசாரா கொடுக்கல் வாங்கல் ஒன்றாக காணப்பட்டதுடன், நகர சபை கட்டளைச் சட்டத்தின் 110(ஆ) பிரிவிற்கு இணங்க பொது மக்கள் நடமாடக்கூடிய இடங்களில் தேவையானவாறு பொதுக் கழிவறை வசதிகள் வழங்க வேண்டியிருந்த போதிலும் பொது மக்கள் நடமாடாத இடமொன்றில் ஆண்களுக்கான 03 கழிவறைகளும் பெண்களுக்கான 03 கழிவறைகளும் ஊனமுற்றோர்களுக்கான 02 | எதிர் காலத்தில் கணிசமான வருமானம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்காக டென்டர் மூலம் இன்றி நகரசபை மூலமாக நிருவகித்து சேவை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னர் உரிமை தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

கழிவறைகளும் 02 பெண்கள் மற்றும் ஆண்களுக்கான குளியலறைகள் அடங்கிய பாரிய கழிவறை முறைமையொன்று நிர்மாணித்தல் செலவு விளைவற்ற செலவொன்றாக மாறியுள்ளது.

### 3.3 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆண்டின் கணிப்பீட்டு அறிக்கையின் படி வியாபார வரி மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்வதற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய மற்றும் பெற்றுக்கொள்ள தேவைப்படாத நிறுவனங்கள் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும் தகைமைகளை பூர்த்தி செய்திருக்காத நிறுவனங்களை பட்டியலிடப்பட்டிருக்கவில்லை. | வருமானப் பரிசோதகரிடம் பெற்றுக்கொள்ளும் வியாபார அனுமதிப்பத்திர தகவல்களின் படி சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய நிறுவனங்கள் மாத்திரம் ஆவணப்படுத்தப்பட்டு குறிப்பிடப்பட்டு அந்த நிறுவனங்களில் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள நிறுவனங்களுக்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய நிறுவனங்களை பட்டியலிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நகர சபையின் நிதி நிருவாகம் தொடர்பான கணக்கு அலுவல்கள் தொடர்பான விதி 293 மற்றும் 294 இற்கு இணங்க தகவல்கள் உட்படுத்தப்பட்டு 2023 ஆண்டிற்கான கணிப்பீட்டு பட்டியல் தயாரித்திருக்கவில்லை. | 2024 வர்த்தக கணிப்பீட்டு அறிக்கையில் மேற்கூறிய அனைத்து தகவல்களையும் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணிப்பீட்டு அறிக்கையில் அனைத்து தகவல்களும் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2023 ஆண்டிற்காக சாக்கடை பவுசர் சேவைக் கட்டணம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் துணைச் சட்டங்கள் தயாரிக்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | துணைச் சட்டங்கள் தயாரிக்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர சபை நிதி நிருவாகம் தொடர்பாக கணக்கீட்டு அலுவல்கள் மீதான விதி 408(iii) மற்றும் மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2020 திசெம்பர் 03 திகதிய இலக்கம் LGD/13/2016(1) சுற்றறிக்கைக்கு முரணாக சபைக்கு சொந்தமான 34 கடையறைகளுக்காக 2017 ஜூன் 29 திகதிய பெறுமதி மதிப்பீட்டின் படி 2018 | புதிய பெறுமதி மதிப்பீடு செயற்படுத்தி மாதாந்த வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும் படி சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. | உரிய காலங்களில் பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மே 01 திகதி முதல் மாதாந்த வாடகை அறவிடப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நகர சபை நிதி நிருவாகம் தொடர்பாக கணக்கீட்டு அலுவல்கள் மீதான விதி 408(iii) மற்றும் (iv) மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2020 திசெம்பர் 03 திகதிய இலக்கம் LGD/13/2016(1) சுற்றறிக்கைக்கு முரணாக 22 கடையறைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருந்ததுடன், உடன்படிக்கைக் காலம் முடிவடைந்த பின்னரும் பெறுகை செய்முறையின்றி அந்த வாடகையாளருக்கு அல்லது அவரிடம் தங்கி வாழ்பவர்களுக்கு அல்லது துணை வாடகையாளருக்கு புதிய உடன்படிக்கை ஒன்றின் மூலம் மற்றும் உடன்படிக்கை இன்றி வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. | கடையறைகளின் நிலைமை தொடர்பாகவும் வாடிக்கையாளர் தொடர்பாகவும், கவனம் செலுத்தி அனைத்து நிலுவைத் தொகைகளையும் அறவீடு செய்து காணப்படுகின்ற உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு இணங்க துணை வாடகையாளர்களுக்கு வாடகைக்கு கொடுக்கும் போது சுற்றறிக்கைக்கு இணங்க மேற்கொண்டு உடன்படிக்கை மேற்கொள்ளல் அனைத்தும் சட்டரீதியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என. | பெறுகை வழிகாட்டல் செய்முறையை கடைபிடித்து வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 103(I)(ஆ) படி GY – 9334 இலக்கம் கொண்ட கப் வண்டிக்கு 2023 பெப்ரவரி 06 திகதி ஏற்பட்டிருந்த திடீர் விபத்து தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்திருக்காததுடன், நிதிப் பிரமாணம் 104(I)(அ) இற்கு இணங்க விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு 104(3) மற்றும் 104(4) இற்கு இணங்க முறையே ஆரம்ப அறிக்கை மற்றும் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | விபத்து தொடர்பாக கராஜில் சமர்ப்பிக்கப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட கூறுவிலைகளின் படி செலவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படுவதுடன், இது தொடர்பாக ஏதேனும் மேலதிகச் செலவொன்று சபையினால் மேற்கொள்ள நேரிடப்படாததனால் இது தொடர்பான அறிக்கையொன்று வழங்கப்படவில்லை என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.6 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அலுவலக அலுவல்களை முகாமைத்துவம் செய்யும் மென்பொருள் முறைமையொன்றினை இலவசமாக பெற்றுக்கொள்வதற்காக | | |

| | | | |
|---|---|---|---|
| | தனியார் கம்பனி ஒன்றுடன் 2020 நவம்பர் 30 திகதி இணங்கியிருந்ததுடன், உடன்படிக்கை தொடர்பாக பரிசோதனை மேற்கொண்ட போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (I) | அலுவலக தேவைப்பாடுகளுக்கு பொருத்தமானவாறு மென்பொருள் முறைமைகளில் விபரக் குறிப்புக்கள் தொடர்பாக இனங்காணல் ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட நிறுவனத்தினால் மென்பொருள் தொடர்பான விபரம் அடங்கிய கடிதம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது என. | விவரக் குறிப்புக்களை இனங்காணல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (II) | உடன்படிக்கையின் படி முதலாம் ஆண்டில் சேவை வழங்கல் இலவசமாக நிறைவேற்றப்பட வேண்டியிருந்த போதிலும் முதலாவது ஆண்டான 2021 ஆண்டிற்காக 2021 மார்ச் 02 திகதி சேவைக் கட்டணமாக ரூபா 140,000 தொகையும் 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்காக ரூபா 140,000 தொகை வீதம் செலுத்தப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட நிறுவனத்தினால் 2020.11.06 திகதி வழங்கியிருந்த கடிதம் 2020.11.30 திகதி திருத்தப்பட்டிருந்ததெனவும் அதன்படி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது எனவும். | உடன்படிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | உறுதிச் சீட்டுக்கள் மற்றும் காசோலைகள் முகாமைத்துவ மென்பொருள் மற்றும் அனைத்து கணக்குகள் முகாமைத்துவம் மென்பொருள் கொள்வனவு செய்வதற்காக 2022 ஆண்டின் போது ரூபா 1,200,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதற்காக விபரக் குறிப்புக்கள் வழங்கியிருந்த போதிலும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் கூறுவிலைகள் சமர்ப்பித்திருந்த நிறுவனங்களின் விவரக் குறிப்புக்கள் இடையே இணக்கமொன்று மேற்கொண்டிருக்காததுடன், குறைந்த விலை தொடர்பாக மாத்திரம் கவனம் செலுத்தியிருந்தது. அதே போல் அந்த மென்பொருள் கொள்வனவு செய்த பின்னர் அவற்றை செயற்படுத்துவதற்கான நிபந்தனைகள் அடக்கி தனியார் கம்பனியுடன் உடன்படிக்கையொன்று மேற்கொண்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட நிறுவனத்தினால் உத்தேச உடன்படிக்கை அனுப்பியிருந்த போதிலும் அதற்கான 100% இணக்கமொன்று சபையிடம் காணப்படாமையால் கலந்துரையாடி புதிய உடன்படிக்கையொன்று 2020.11.30 திகதி கையொப்பமிடப்பட்டது என. | விவரக் குறிப்புக்கள் இடையே இணக்கமொன்று மேற்கொண்டு பொருத்தமான நிறுவனத்தை தெரிவு செய்தல் மேற்கொள்ள வேண்டும். |

### 3.7 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியின் படி சிரேஷ்ட மட்ட 02 பதவிகளில் வெற்றிடமும், இரண்டாம் மட்ட 05 பதவிகளில் 09 வெற்றிடங்களும் ஆரம்ப மட்ட 08 பதவிகளில் 25 வெற்றிடம் ஒன்றும், காணப்பட்டமையால் சபையின் கருமங்களில் செயற்திறனுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. | செயலாளர் மற்றும் கணக்காளர் பதவிகள் சிரேஷ்ட மட்ட 2 பதவிகளாக காணப்படுவதுடன், அவற்றில் செயலாளர் பதவிக்காக பதில் கடமை மற்றும் கடமை நிறைவேற்றும் அடிப்படையில் நிருவாக உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் மற்றும் கணக்காளர் பதவி பதவியணி அங்கீகரிக்கப்பட்ட நாளாகிய 2013.01.01 திகதி முதல் வெற்றிடமாக காணப்படுவதுடன், கணக்காளர் உயர் டிப்லோமா சித்தியடைந்த கணக்கு விடயம் தொடர்பான அறிவுரை முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஒருவர் கணக்காளரினால் கடமைகளை நிறைவேற்றப்பட்டு வருகின்றது என. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |